<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.514 /2019</u>

**2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இமாம்(எ) இமாம் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நபீகான் சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வாலிகண்டாபுரம் | வயது | : 72 /2025 |

**<u>முதல் விசாரணை :</u>**

(i) நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 09.07.1990ம் தேதியிட்டு தாவா சொத்தை பொருத்து எனது பெயரிலுள்ள பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு நான் செலுத்திய நிலவரி ரசீதுகள்(எண்ணிக்கை 6) சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு எனது மற்றும் எனது மனைவி பெயரிலுள்ள கணினி பட்டா (எண்ணிக்கை 2) அசல் மற்றும் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 1

ii) 16.03.2015ம் தேதியிட்டு பசீர்கான் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட்ட பத்திரத்தை நான் ரத்து செய்து பதிவு செய்யப்பட்ட ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 16.03.2015ம் தேதியிட்டு ஷபியுல்லாகான் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் ரத்து செய்து பதிவு செய்யப்பட்ட ரத்து பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு வறட்சி நிவாரண தொகை பெற எனக்கு அரசால் வழங்கப்பட்ட பயனாளி அடையாளச் சீட்டின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)18.02.2023ம் தேதியிட்ட அசல் வழக்கு எண்.825/2019ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 18.02.2023ம் தேதியிட்ட அசல் வழக்கு எண்.825/2019ன் தீர்ப்புரை

மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **பி.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)